# முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

முன்னிலை:–**திருமதி ஆ.முத்துசாரதா, B.L., P.G.D.P.M.,**
**முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்.**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27–ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**Tr. O.P.No. 71/2025**

**(TNDG01-003092-2025)**

சௌந்தர்ராஜன், வயது 75 ... மனுதாரர்

/ எதிர் /

கஸ்தூரி, வயது 72 .. எதிர்மனுதாரர்

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்னர் 12.3.2026 ம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. நா. ரமேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திருவாளர்கள் R. சரவணன், P. சதீஸ்குமார் ஆகியோர்கள் ஆஜராகியும், மனு, உரை, எதிருரை மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இம்மன்றத்தால் பிறப்பிக்கப்படும் :

## உத்தரவு

திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள நிறைவேற்றுகை மனு எண்16/2025 மனுவினை திண்டுக்கல் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிறைவேற்றுகை மனு எண். 17/2025 மனுவுடன் கூட்டாக விசாரணை செய்வதற்கு ஏதுவாக திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள நி.ம.எண் 16/2025 மனுவினை, திண்டுக்கல் முதன்மை சார்பு நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்து அந்நீதிமன்ற

நி.ம.எண் 17/2025 மனுவுடன் சேர்த்து விசாரிக்க கோரி உ.வி.மு.ச. பிரிவு 24ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம் :</u>

மனுதாரர் திண்டுக்கல், முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நி.ம.எண். 17/2025 மனுவிலும், திண்டுக்கல், கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நி.ம.எண். 16/2025 மனுவிலும் எதிர்மனுதாரர் ஆவார். இரண்டு மனுக்களிலும் ஒரே மனுதாரர் மற்றும் ஒரே எதிர்மனுதாரர் ஆவார்கள். மேற்படி இரண்டு மனுக்களிலும் உள்ள சங்கதிகள் ஒரே சாராம்சம் கொண்டவை என்பதால் இவ்விரு மனுக்களும் ஒரே நீதிமன்றத்தில் ஒரே சமயத்தில் விசாரிக்கப்படவேண்டியது அவசியமானதாக உள்ளது. எனவே, திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள நி.ம.எண். 16/2025 மனுவினை, திண்டுக்கல் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள நி.ம.எண். 17/2025 மனுவுடன் கூட்டாக விசாரணை செய்வதற்கு ஏதுவாக திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள நி.ம.எண். 16/2025 மனுவினை , திண்டுக்கல் முதன்மை சார்பு நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்ய உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை சுருக்கம் :</u>

திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள நி.ம.எண். 16/2025 மற்றும் திண்டுக்கல் முதன்மை சார்பு நீதிமன்றத்தில்

நிலுவையிலுள்ள நி.ம.எண். 17/2025 மனுக்களில் உள்ள மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருவரும் ஒரே நபர்கள் ஆவார்கள். திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள நி.ம.எண். 16/2025 மனுவினை திண்டுக்கல் முதன்மை சார்பு நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்து, அந்நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள நி.ம.எண். 17/2025 மனுவுடன் சேர்த்து ஒன்றாக விசாரணை செய்ய எதிர்மனுதாரருக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை.

4) இருதரப்பு வாதுரைகளின் அடிப்படையில் இம்மனுவில் தீர்வுக்காக எழுகின்ற பிரச்னை யாதெனில், இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா ? என்பதேயாகும்.

5) இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிய சான்றுகள் ஏதும் முன்வைக்கப்படவில்லை. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன.

6) **<u>பிரச்னைக்குரிய தீர்வு :-</u>**

திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள நி.ம.எண். 16/2025 மனுவினை திண்டுக்கல் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள நி.ம.எண். 17/2025 மனுவுடன் சேர்த்து விசாரிக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் மேற்படி இரு மனுக்களிலும் உள்ள உபயதரப்பார்கள் ஒன்றாக இருப்பதாலும், மேற்படி மனுக்கள் ஒரே வழக்குமூலத்தில் எழுந்த பிரச்சனையின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி இரண்டு மனுக்களையும் தனித்தனி

நீதிமன்றத்தில் விசாரிக்கும்பட்சத்தில் இரு வேறுபட்ட தீர்வுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால், திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள நி.ம.எண். 16/2025 மனுவை, திண்டுக்கல் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் உள்ள நி.ம.எண். 17/2025 மனுவுடன் சேர்த்து நடத்த உத்தரவாகவேண்டும் என்று எடுத்துரைக்கப்பட்டது. இதுகுறித்து எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித ஆட்சேபணையும் இல்லை என எடுத்துரைக்கப்பட்டது.

7) வழக்கு கோப்பு ஆராயப்பட்டதிலிருந்து அசல் வழக்குகளில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்காக திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நி.ம.எண். 16/2025 மற்றும் திண்டுக்கல் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நி.ம.எண். 17/2025 தாக்கல் செய்யப்பட்டு நிலுவையிலுள்ளது என்பதும், இரு மனுக்களிலும் உள்ள மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஒரே நபர் என்பதும் தெரிய வருகிறது. மேலும், எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவினை அனுமதிப்பதில் எவ்வித ஆட்சேபணையும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன இரண்டு மனுக்களிலும் உள்ள தரப்பினர்கள் ஒன்றாக இருப்பதாலும், இரண்டு மனுக்களையும் ஒன்றாக விசாரிக்கப்படும்பட்சத்தில் விசாரணைக்கான கால விரையம் தவிர்க்கப்படும் என்பதும், தனித்தனியான வழக்கு நடவடிக்கைகளை (multiplicity of proceedings) தவிர்க்க இயலும் என்பதும் மறுக்க இயலாது. எனவே, மனுதாரர் தரப்பில் கோரப்படுவது போன்று திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில்

நிலுவையிலுள்ள நி.ம.எண். 16/2025 மனுவினை திண்டுக்கல் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள நி.ம. எண். 17/2025 மனுவுடன் கூட்டாக விசாரணை செய்வதற்கு ஏதுவாக திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள நி.ம.எண். 16/2025 மனுவினை, திண்டுக்கல் முதன்மை சார்பு நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்து அந்நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள நி.ம.எண்.17/2025 மனுவுடன் ஒரு சேர விசாரிக்க மனுவை அனுமதித்து உத்திரவிடுவது நீதியின் நலனுக்கு உகந்தது என்று தீர்மானித்து அவ்வாறே இந்த பிரச்னைக்கு தீர்வு காணப்படுகின்றது.

**முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்படுகின்றது. திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள நி.ம. எண்.16/2025 யை ஏற்கனவே திண்டுக்கல் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள நி.ம.எண்.17/2025 மனுவுடன் சேர்த்து நடத்துமாறு மாறுதல் செய்து இம்மனுவை அனுமதித்து உத்திரவிடப்படுகிறது. மேற்படி வழக்குகளை தனித்தனியாகவோ அல்லது சேர்த்தோ நடத்த மேற்படி நீதிமன்றம் தீர்மானித்துக் கொள்ள அனுமதியளிக்கப்படுகிறது. செலவுத் தொகை உத்தரவு ஏதுமில்லை.

இந்த உத்திரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டு, 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.03.27 18:00:20 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி**
**திண்டுக்கல்**

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிய சான்றுகள் ஏதுமில்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.03.27 18:00:30 +0530

**மு.மா.நீ.**
**திண்டுக்கல்**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
திண்டுக்கல்
Tr.O.P.No.71/2025
நாள் 27.3.2026
உத்திரவு